



விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. கழக மறுசீரமைப்பு தொடர்பான மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் புதுச்சேரி மாநில அமைப்பாளர் இரா.சிவா அவர்களும் மாநில மாணவர் அணி செயலாளர் திருமதி.ஜெ.வீரமணி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன 22.08.2026 அன்று கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட அனைத்து தீர்மானங்களையும் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக ஆதரிப்பதோடு கழக மறுசீரமைப்பு தொடர்பாக கழக செயற்குழுவில் எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானியங்களையும் நிறைவேற்றுவது எனவும் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது. மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், டி.செல்வராஜ், அப்துல் சலாம், காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய, நகர, பேரூராட்சி கழக ஒன்றிய செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி அப்பம்பட்டு அய்யாதுரை – இராதிகா தம்பதியரின் மகள் அஷ்விதா – திருக்கோவிலூர் வட்டம் திருப்பாலந்தல் முத்துக்குமரன் – ஜெயலட்சுமி தம்பதியர் மகன் சந்துரு ஆகியோரின் திருமண விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் செஞ்சி கிழக்கு ஒன்றியச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் நந்தகுமார் அறிவிப்பு!

வேலூர், செப். 8-

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் ஏ. பி. நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

முன்னாள். எம்.எல்.ஏ.க்கள் ப. கார்த்திகேயன், அமலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு. பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



சிறப்பு அழைப்பாளர்களாக இ.கருணாநிதி, தாயகம்கவி ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

தொடர்ந்து கடந்த 22ந் தேதி சென்னையில் நடந்த தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் கட்சி அமைப்பை மறுசீரமைப்பு செய்திட ஏதுவாக மறு சீரமைப்புக் குழு அமைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்படி ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் மறு சீரமைப்புகுழு பரிந்துரைத்தபடி புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ய வயது வரம்பு மற்றும் அதிக பட்ச பதவி காலவரம்பு போன்ற விதிமுறைகளின் படியும் தலைமைக் கழக மறு சீரமைப்புப் பிரதிநிதிகளின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி தேவையான மறுசீரமைப்பு நடவடிக்கை எடுக்க அனைத்து நிர்வாகிகளும் மறுசீரமைப்பு குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வருகிற 15ந்தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள், 17ந்தேதி தந்தை பெரியார் பிறந்தநாள் நாள் இந்த இரண்டு நாளிலும் கழகக் கொடியேற்றி ஏழைஎளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும். வருகிற 15ந் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில் தெற்கு மாவட்ட தி.மு.க. வினர் திரளாக கலந்துகொள்ள வேண்டும் உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அன்றாடம் சீரழியும் சட்டம் – ஒழுங்கை சீர்படுத்தி ஜனநாயக ஆட்சியை நடத்த வேண்டும்!

# பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை என்பதை முதல்வர் உணர வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 8-

“பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை’’ என்ற பழைய பாடத்தைப் புதிய அரசும், முதலமைச்சரும் உணர்வது நல்லது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைச் செயலாளரும், மேனாள் அமைச்சரும், இந்நாள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு.கே.என்.நேரு அவர்கள் மற்றும் அவரது சகோதரர்கள் இல்லங்கள், அலுவலகங்களில் தமிழ்நாடு அரசின் லஞ்ச ஒழிப்புத் துறை நேற்று (5.9.2026) சென்று, சோதனைக்கு மேல் சோதனை போட்டனர்.

இதற்குமுன் சட்டமன்றத் தி.மு.க.வின் கொறடாவும், மேனாள் அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் மீதும் குற்றச்சாட்டு கூறி, வழக்குத் தொடர்ந்ததில், நீதிமன்றத்தின் ஆணைப்படி அப்படியே அது நிற்கும் நிலை.

**தலைமைச் செயலாளர் மீது நடவடிக்கை உண்டா?**

பழிவாங்கும் அரசியல் தான் கடந்த 100 நாள் ஆட்



சியில் அரங்கேற்றப்பட்டு வருகிறது. குற்றம் சுமத்தப்பட்ட ஆளுங்கட்சியாளர்கள் மீதோ, மற்றபடி முதலமைச்சர், அமைச்சருக்குத் ‘‘தெரியாமல்’’ கூட்டணிக் கட்சியாகிய, ஆதரவு தந்து வருகின்ற கட்சியினர் மீது அடக்குமுறைப் பாய, ஆயத்தமாகக் குறிப்பெடுப்பதற்கும், மாணவர்கள் பற்றிய விவரச் சேகரிப்பிற்கும் காரணமானத் தலைமைச் செயலாளர் மீது, அக்கட்சிகளின் பொறுப்பு மிகுந்த தமிழ் மாநில செயலாளர்கள் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளை அறிவித்தும், இதுவரை எந்த சிறு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஏன்? காவல்துறையின் பல நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட துறை ஆளுமைகளுக்கே தெரியாத வண்ணம் ‘Administrative Excutive’ ஆக அதிகார வர்க்கத்தின்மூலம் நடைபெறும் அவலம் (மேற்சொன்ன தொடர் உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகளின் தீர்ப்பு ஒன்றில் ஒரு நீதிபதி, மக்கள் ஓட்டுப் போட்டு ஆட்சியை நடத்துபவருக்கு ‘Political Excutive’ என்ற புது சொற்றொடர் தரப்பட்டது).

இதுவரை போடப்பட்ட வழக்குகளில், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தின் விசாரணைகளில் ஆளும் அரசுக்குச் சாதகமாக இல்லாததே, பழிவாங்கும் அரசியல் நடைபெறுகிறது என்பதற்கான மறைமுகச் சுட்டிக்காட்டுதல் போன்ற நிலை அல்லவா? அது ஒருபுறம் இருக்கட்டும்!

**“எங்கள் மீது சுமத்தப்பட்டவை ஆதாரமற்றவை என்று நாங்கள் நிரூபிப்போம்!” - கே.என்.நேரு!**

விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து, நீதிமன்றங்களில், “எங்கள் மீது சுமத்தப்பட்டவை ஆதாரமற்றவை என்று நாங்கள் நிரூபிப்போம்’’ என்று கூறியுள்ளதோடு, ‘இந்த அச்சுறுத்தல் அரசியலை எதிர்கொள்ளத் தயார்’ என்று கே.என்.நேரு கூறியுள்ளார்.

அதோடு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என். நேரு குடும்பம் பாரம்பரியமான வியாபாரத்திலும், விவசாயத்திலும் லால்குடி பகுதி, மற்ற பகுதிகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு, வசதி படைத்தக் குடும்பத்தினர். இதற்கு முன் ஒன்றிய அரசின் வருமான வரித் துறை வழக்குகளைச் சமாளித்து, தங்களது நிலைப்பாட்டை நிரூபித்து, நெருப்பாற்றில் நீந்திப் பழக்கப்பட்டவர்கள்.

இதனால், “தமிழ்நாட்டின் ஆக்கப்பூர்வ அரசியல் நடைபெறாமல், பழிவாங்கும் எதிர்மறை அரசியல் தான் நடக்கிறது ‘ஜனநாயகன்’ ஆட்சியில்’’ என்று ஓட்டுப் போட்ட மக்களே உணரும் நிலை இப்போது! (ஆதரவு தரும் கூட்டணிக் கட்சியினரின் அதிருப்தி, மலைபோல இருக்கும் நிலையில்).

மக்கள் நாயக ஆட்சியை நடத்த வேண்டும் என்பதே பொதுவானவர்களின் கருத்து!

எனவே, ஆக்கப்பூர்வ ஆட்சியை நடத்தி, அன்றாடம் சீர்கேடு அடையும் சட்டம் ஒழுங்கைச் சரிப்படுத்தி, மக்கள் நாயக ஆட்சியை நடத்தவேண்டும் என்பதே பொதுவானவர்களின் கருத்து என்பதை மறந்தால், அதன் விளைவை அறுவடை செய்யவேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சியையே சாரும்.

எந்த ஆட்சியானாலும், ‘‘பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை’’ என்ற பழைய பாடத்தைப் புதிய அரசும், முதலமைச்சரும் உணர்வது நல்லது!

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!


செஞ்சி, செப். 8-

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மைலம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில்,முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் முன்னிலையில் 10.09.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணி அளவில் செஞ்சி திண்டிவனம் சாலை ஊரணித் தாங்களில் உள்ள சஞ்சனா பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுவை இரா.சிவா, மாநில மாணவரணி செயலாளர் ஜெ.வீரமணி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்



டுக்கொள்கிறேன்.

பொருள்:

22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில்நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் அறிவித்த கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானங்களை செயல்படுத்துதல் சம்பந்தமாக,

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.,

செப்டம்பர் 15 சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கழக நிர்வாகிகள் பங்கேற்பது சம்பந்தமாக.,

கழக ஆக்கப்பணிகள் சம்பந்தமாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் ஜெகதீஸ்வரியின் கார் மோதி இளைஞர் உயிரிழப்பு!

செங்கல்பட்டு, செப். 8-

சென்னையை அடுத்த காட்டாங்குளத்தூரில் த.வெ.க. அமைச்சர் ஜெகதீஸ்வரியின் கார் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அதிகாலை காட்டாங்குளத்தூரைச் சேர்ந்த இறையன்பு என்பவர் தனது இருசக்கர வாகனத்தில் காட்டாங்குளத்தூர் துலுக்கத்தம்மன் கோயில் திருவிழாவுக்குச் சென்று கொண்டிருந்தார். காட்டாங்குளத்தூர் சிக்னல் அருகே ஜி.எஸ்.டி. சாலையை கடக்க முயன்றபோது, செங்கல்பட்டில் இருந்து தாம்பரம் நோக்கி சென்ற TN 84 AZ 5941 என்ற மாருதி எர்டிகா கார், மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இந்த விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த இறையன்புவை பொதுமக்கள் மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் எஸ்.பி.கோயிலில் உள்ள அரசு அவசர சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

தகவல் அறிந்த போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். விபத்தில் தொடர்புடைய கார் அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு சொந்தமானது என்பதும், விபத்து நடந்த போது, அமைச்சரின் குடும்பத்தினர் காரில் இருந்ததும் தெரியவந்தது.

இறந்த இறையன்புவின் தந்தை சிவக்குமார் அளித்த புகாரின் பேரில், கார் ஓட்டுநரான மதுரையைச் சேர்ந்த சின்ன அக்னி என்பவர் மீது வழக்குப் பதிவு செய்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.






கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் தலைமையில், நேற்று முன்தினம் செப்டம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.உதயசூரியன் தலைமைக் கழக பிரதிநிதிகள் ஆர்.டி.அரசு, கே.பி.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டு கழக நிர்வாக சீரமைப்பு தொடர்பாகவும், முப்பெரும் விழா தொடர்பாகவும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். மேலும் இக்கூட்டத்தில் தே.மலையரசன் எம்.பி., ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.






கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.இராமமூர்த்தி தலைமையில், செப்டம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், தலைமைக் கழக பிரதிநிதிகள் ஆர்.டி.அரசு, கே.பி.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டு கழக நிர்வாக சீரமைப்பு தொடர்பாகவும், முப்பெரும் விழா தொடர்பாகவும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். மேலும் இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.